
# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6 31



விலை 20 காசு

# பெர்ட்ரண்டு ரசல்!

சென்ற கிழமை, உலகப் பேரறிஞர்களது இரங்கற் செய்திகளையெல்லாம் திரட்டிக்கொண்டு மறைந்து விட்ட பேரறிஞர் பெர்ட்ரண்டு ரசல் அவர்களது கம்பீரமான தோற்றந்தான், இந்தக் கிழமை "காஞ்சி"யின் முகப்பில் காணப்படுகிறது.

பெர்ட்ரண்டு ரசல், தம் வாழ்நாள் முழுதும் பேரறிவாளர்கள் பலருக்கும் ஒரு பிரச்னையாகவே இருந்து வந்திருக்கிறார். காரணம், கணிதம், தத்துவ இயல், உளவியல், சமூக இயல், இலக்கியம் முதலான அனைத்துத் துறையிலும் அவர் கொண்டிருந்த ஈடுபாடும், புலமையும்தான் என்பது பிழையாகாது.

ரசல், பிரபு வம்சத்தில் பிறந்தவர் என்பது மட்டுமல்லாமல், விக்டோரியா அரசியார் காலத்தில் பிரதமராயிருந்த ஜான் ரசல் என்பவரது பேரப் பிள்ளையும் ஆவார்.

தம் இளமைக் காலத்திலேயே பெற்றோரை இழந்து விட்டதுதான், ரசலுக்கு எந்த ஒன்றிலும் ஒரு ஆழமான உணர்வைத் தோற்றுவித்திருக்க வேண்டும். புரட்சிகரமான போக்குக்கு அவரது மனதில் இடம் ஏற்பட்டிருந்ததற்குக் காரணமாக இது இருந்திருக்கக்கூடும்.

தம் 22-ம் வயதில் முதன்முதலாக ஒரு சீர்திருத்தத் திருமணத்தை, மிகவும் புரட்சிகரமான முறையில் நடத்திக் கொண்டாராம் இவர். முதலாவது மணப் பெண் என்ற இடத்தில் ஆலிஸ்சுமித் என்பவர் இடம் பெறுகிறார். இந்தத் திருமணத்தின் மூலம் அவர் வாழ்வில் திருப்பங்கள் எதுவும் ஏற்பட்டு விடவில்லைஎன்பதுமட்டுமல்லாமல், மகிழ்ச்சிகூட ஏற்பட்டுவிடவில்லை என்று ரசலுக்கு மனவருத்தம் இருக்கும்போல் தெரிகிறது.

மொத்தம் நான்கு முறை திருமணம் செய்து கொண்டிருக்கிறார். கடைசியாக அவர் மணம் செய்து கொண்டபோது அவருக்கு 80—வயது நடந்து கொண்டிருந்தது!

இந்த வாழ்க்கை அனுபவங்கள், ரசலுக்கு மிகுந்த துணிவினையும், தெளிவினையும் தந்திருக்கின்றன என்பது சரியான கருத்தாகவே இருக்கக்கூடும். மேதைமைப் பண்புக்குரியாராக ஆக்கும் அளவுக்கு ஆற்றலினை வளர்த்து விட்டிருக்கின்றன!

துணிவோடு பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துக் காட்டிவந்த காரணத்தால், இவரை இங்கிலாந்து நாடு ஒரு கம்யூனிஸ்டு என்று குற்றஞ் சாட்டினாலும், நம்மைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு இங்கிலாந்து நாட்டு ஈ. வெ. ரா. என்றுதான் சொல்ல வேண்டும்!

அறிஞர் ரசல் எழுதிய "திருமணமும் - ஒழுக்கங்களும்" என்ற நூல் இங்கிலாந்து நாட்டை மட்டுமல்லாது வெளிநாடுகளையும் ஒரு உலுக்கு உலுக்கி வைத்திருக்கிறது. இதில் ஆண் - பெண் பாலுணர்வு பற்றிய சர்ச்சைக்குரிய அம்சங்கள் மலிந்திருக்கின்றன. இந்நூலில் குழந்தைகளுக்கும் சரி, இளைஞர்களுக்கும் சரி, உடலுறவு பற்றிய எந்த இரகசியங்களையும் மறைக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறார். உடலுறவானது ஒரு இரகசியத் தத்துவமே அல்ல என்பது இவரது வாதம்! குழந்தைகளிடம் இது போன்ற விஷயங்களை மறைப்பதனால், அவர்களை உண்மைக்குப் புறம்பான முறையில் வளர்க்கும் விபரீதத்திற்குப் பெற்றோரே காரணம் என்கிறார் ரசல். இவை மட்டுமல்லாது, ஆண், பெண் உறவு சம்பந்தமாக சமஉரிமை இருக்கவேண்டும் என்பதும் இவரது தத்துவமாகும். உடலுறவில் ஒரு ஆணுக்கு இருக்கும் உரிமைகள் பெண்ணுக்கும் தரப்பட லேண்டும் என்பது இவரது வாதம். மறுப்பது, உரிமை மறுப்பு என்கிறார் இவர். இவையும், இவை போன்ற வேறு, பல கருத்துக்களுமே, சர்ச்சைகளைத் தோற்றுவித்தன.

கருத்து வேறுபாடுகளுக்குரிய — சர்ச்சைகளுக்குரிய தத்துவங்களைத் தந்தாலும் இவர் மேதை என்பதை எவரும் மறுக்கவில்லை.

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் ரசல், இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவரானாலும், இந்தியாவின் பக்கமே இருந்திருக்கிறார். போராட்டத்துக்குத் தன் முழு ஆதரவினையும் தெரிவித்திருக்கிறார். இது போலவே வியட்நாம் போர் பற்றி ரசலின் கருத்து மதிப்புக் குரியதாகும். வியட்நாம்போரை எதிர்த்து மாபெரும் மக்கள் இயக்கம் ஒன்றையே நடத்தி, கருத்துப் புரட்சியினை உண்டாக்கி விட்டிருக்கிறார்.

மொத்தத்தில் பெர்ட்ரண்டு ரசல், உலக அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும் போராடிக்கொண்டே வந்திருக்கிறார், அணுகுண்டுஎதிர்ப்பு இயக்கம் காரணமாக இவர் தம் 90-வது வயதில் சிறைத் தண்டனை பெற்றார் என்றால், அமைதிப் பணியில் இவருக்குள்ள நாட்டத்தை அளவிட முடியும்.

1950ல் இவருக்கு இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு கிடைத்தது. 40-க்கும் மேற்பட்ட பல துறைகள் தொடர்பான நூல்கள் எழுதி இருக்கிறார்.

இவரது இழப்பு ஐரோப்பிய நாடுகளில் பெரும் இழப்பாகவே கருதப் படுகிறது.

★

## வழக்கத்தைவிட அதிகம்!

பேரறிஞர் அண்ணா அவர்களது நினைவாக இத் திங்கள் 3-ம் நாள் வெளியிடப்பெற்ற சிறப்பு அஞ்சல் தலைகள் மொத்தம் 35 இலட்சமாகும்.

இது, இதுவரையில் வெளியிடப்படும் வழக்கத்தைவிட மிக அதிகமானதாகும்.

இதனை மத்திய தபால், தந்தித்துறை அமைச்சர் ஷேர்சிங் அவர்களே அறிவித்திருக்கிறார்கள்.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 | ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 15—2—70 | இதழ் 31

# பொன்னிக்கரைக்குப் போவோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக ஆனதற்கப்புறம், தன் முதலாவது மாவட்ட மாநாட்டைக் கூட்டிப் பெருமைப்படவிருக்கிறது, பொன்னி நதிக்கரையில் பொலிவுடன் இருக்கும் திருச்சிமாநகரம்! இந்தத் திங்கள் 21, 22-ம் நாளில்.

துணைக்கண்டத்து வரலாற்றில் தமிழகம் அன்றும் இன்றும் எப்படி ஒரு தனியிடத்தைப் பெற்றிருந்ததோ, பெற்றிருக்கிறதோ, அதைப்போலவே, தி. மு. க. வரலாற்றில் என்றென்றும் திருச்சிராப்பள்ளிக்கு ஒரு தனி இடம், சிறப்பிடம் என்றும் இருக்கத்தான் செய்யும்.

பெரியாரிடமிருந்து பிரிந்துவந்த பின்னரும்கூட 1956 வரையில் தி. மு. கழகம் சமுதாய சீர்திருத்தங்களையே இலட்சியமாகக் கொண்டிருந்த நிலையினை மாற்றி 1956ல் கூடிய மாநில மாநாடு, அரசியலில் பங்குபெறுவது என்ற தீர்ப்பினைத் தந்தது, இத்திருச்சி நகரம்தான்! அடுத்த ஆண்டிலேயே இத்தீர்ப்புக்குக் கிடைத்த பரிசுதான் 15 எம். எல். ஏ.க்கள்.

இதைப்போலவே, 1966ல் சரியாகப் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தமுறை எப்படியும் ஆட்சியைக் கைப்பற்றியே தீருவது என்ற முடிவோடு முதன் முதல் மாவட்ட மாநாடு கூடியதும் திருச்சியில் தான்!

எனவேதான் கழக வரலாற்றில் திருச்சிக்குச் சிறப்பிடம் தரப்படுகிறது. இத்தகைய சிறப்புக்குரி" நகரத்தில்தான், தி. மு. க. ஆளுங்கட்சி என்ற தகுதியோடு நடத்தும் முதல் மாநாடும் நடைபெற வேண்டும் என்று பொறுப்புடையவர்கள் முடிவெடுத்ததில் மகிழ்ச்சி பிறக்கிறது,

தமிழகத்துக்கு மட்டுமல்லாமல், துணைக்கண்டம் முழுமைக்குமே, ஒரு அரசியல் இயக்கம் நடத்துவது எப்படி என்பதையும், கூட்டங்கள், மாநாடுகள் நடத்தும் முறைமைகளையும் கற்றுத்தந்திருப்பது தி.மு. கழகந்தான் என்று இன்று பெருமையோடு சொல்லிக்கொண்டிருக்க முடியும். ஏனென்றால், பிற அரசியல் கட்சிகள் எல்லாம் நாம் எப்படி பந்தல் போடுகிறோமோ, அப்படியே அவைகளும் போட்டுப் பார்க்கின்றன.

நம்முடைய சுவரொட்டிகள் எப்படி இருக்கின்றனவோ, அப்படியே பிற கட்சிகளும் அச்சடித்துக் கொண்டிருக்கின்றன.

நம்முடைய நிகழ்ச்சி அமைப்புக்கள் எவ்வாறு ஒழுங்குப்படுத்தப்படுகின்றனவோ, அப்படியேதான் பிறவும் ஒழுங்குபடுத்திப் பார்க்க முனைகின்றன.

கலைநிகழ்ச்சி முறைகளில்கூட நம்மைப்போலவே தான் செய்து பார்க்க முடல்கின்றன.

எனவேதான் நாம்தான், பிறவற்றுக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறோம் என்ற பெருமிதம் ஏற்படுகிறது.

இந்தப் பெருமிதத்தைத்தான் நாம் மீண்டும் திருச்சியிலே காணப்போகிறோம். குடும்பத்தோடுகூடி, கண்டு கேட்டு களிபேருவகைக் கொள்ளப்போகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில், 1966 திருச்சி மாநாடுபற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் 'காஞ்சி' இதழில் எழுதிய தலையங்கத்தின் சில பகுதிகளை இங்கு மீண்டும் வெளியிடுவது சாலப் பொருத்தமாயிருக்கும்.

அண்ணா அவர்கள் எழுதுகிறார்கள்:

"திருச்சி மாநாட்டுக்கான நாட்களைக் குறிப்பிட்டு நாவலர் விடுத்துள்ள அறிக்கையும், வரவேற்புக் குழுவினர் அளித்துள்ள விளக்கமும் கழகத் தோழர்களுக்கு எழுச்சியைத் தருவதாக அமைந்திருக்கிறது.

காலம் கடுகி ஓடிக்கொண்டிருக்கிறது. அரசியல் உலகிலே கடும் காற்று வீசத் தலைப்பட்டுவிட்டது. இந்த நேரத்தில் நடத்தப்படும் திருச்சி மாநாடு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தத் தக்கதாக அமைகிறது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு நமது கழகத் தோழர்கள் மிகப்பெரும் அளவிலே கூடி, கழக வளர்ச்சிபற்றிக் கலந்துரையாடும் நல் வாய்ப்பு இது.

தத்தமது தொகுதிகளின் நிலைமை பற்றி ஒருவருக்கொருவர் கலந்து பேசி பொது நிலைமை பற்றிய "கணிப்பு" பெற்றிடத் தக்க நல்வாய்ப்பாகும்.

கழகம் மேற்கொண்டுள்ள பணியின் தூய்மை குறித்தும், இன்றைய அரசியல் நிலைமை குறித்தும், ஆய்வுரை அளித்திட கழக முன்னணியினர் அனைவரும் வருகின்றனர்.

இம்மாநாட்டிலே திரண்டிடும் அணிவகுப்பு, கழக வளர்ச்சியினை மாற்றாரும் உணரத் தக்கதாக அமையவேண்டும்.

தி. மு. கழகம் ஒரு பெரிய குடும்பம்— என்கிறோம்.

கழகத் தொடர்புள்ள குடும்பங்கள் பல்லாயிரக் கணக்கிலே திருச்சியைத் திருநகராக்கிட வேண்டுகிறோம்.

மலர்ந்த முகம்! ஒளி விடு கண்கள்! உற்சாகமான உரையாடல்! எழுச்சி!—இவைகளைக் காணவும் ஆர்வத்துடன் உள்ள பலப் பல ஆயிரவரும் இங்குக் கூடிடுவர்.

கழகத்தவர் நடாத்திடும் மாநாடு மிகச் சிறப்புள்ளதாகவே இருக்கும்; அவர்களைப் போல அருமையாக மாநாட்டு நிகழ்ச்சியினை நடாத்திக் காட்டத் தக்கவர்கள் இல்லை என்றெல்லாம் ஏற்கனவே பல்வேறு அரசியல் கட்சியினரும் பாராட்டியுள்ளனர்.

(15-ம் பக்கம் பார்க்க)




# [11]

வீரமணி, நடனாவை எண்ணி ஏங்கினான். அவள் மனம் என்னபாடு படுமோ என்று நினைத்து நொந்தான். கலிங்கக் காட்டிலும் மேட்டிலும் சுற்றினான். பணிந்த கலிங்கரும் தன்னைக் கண்டால், கொடுமை புரிவர் என்பது அவனுக்குத் தெரியும். எனவே ஒருவர் கண்ணிலும் படாமல் ஒளிந்து வாழலாயினான், வேடர்களுடன் வேடனானான். கல் வெட்டுவோருடன் கலந்தால் கல் வெட்டுவான். மண் சுமப்போருடன் சேர்ந்தால், மண் சுமப்பான். உலவினான், என்ன செய்வது என்று தெரியாமல். நடனாவுக்கு அரண்மனையிலே அபாரமான செல்வாக்கு இருப்பதால், எப்படியாவது அரசகுமாரி மூலமாக மன்னனின் மனத்தை மாற்றி தன்னை மீட்பாள் என்று கருதினான். எவ்வளவுதான் வெளிப்படையாக குகையிலே நடந்த விஷயத்தைக் கூறினாலும், மன்னன் நம்பமாட்டானே என்றுபயந்தான். மேலும், விஷயமோ, ஓர் ராணியுடைய வாழ்வைப் பாதிக்கக் கூடியது. ஒரு நீலமணிதான் இருந்த ஆதாரம்! அது ஒளி விட்டதேயொழியப் பேசுமா! யார் சொல்வார்கள் தனது தூய்மையைப்பற்றி என்று எண்ணி மனம் புண்ணானான். நடனாவின் இன்பக் கனவைக் கெடுத்தேன்: மன்னனின் மகிழ்ச்சியைக் குலைத்தேன்; வீரர்கள் கூட்டத்திற்கோர் கேலிக் கூத்தானேன் என்று நினைத்தான். இங்கு வீரமணி இவ்விதமிருக்க, நடனாவோ நறுமலர்த் தோட்டத்திலே உலவினாள்: மலர் பரித்தாள்; மானைத் துள்ளி விளையாடினாள்; மடியிலே தலையைச் சாய்த்துக்கொண்டு மதுரமான மொழி பேசும் மணாளனின் நெற்றியைத் தடவினாள். இந்த இன்ப விளையாட்டிலே இருந்தவள் திடீரென அந்தகாரம் கண்டாள்; ஐயோ என்று அலறினாள்; பாம்பு என்று பதைத்தாள்; பாரேன் உன்முகத்தை என்று கடிந்துரைத்தாள்; காலிலே முள் தைத்ததே என்று கதறினாள். காடு மலை வனம் சுற்றினாள்; கழுகு கொத்துகிறதே என்று கூறினாள்; கலிங்கம் அழியட்டும் என்றும், காதலரே வருக என்றும் மணாளனே எனக்கு மன்னன் என்றும் குளறினாள். இவ்வளவும் படுக்கையில் ஜுரவேகத்தில், மயக்கத்தில்!!

அரசிளங்குமரியின் சொற்படி, சென்ற கங்காபாலா, நடனா மயக்கமுற்றுக் கீழே சாய்ந்திருக்கக் கண்டாள். அன்று முதல் பத்து நாட்கள் வரை, நடனாவுக்கு மயக்கமும் ஜுரமும் அடக்க முடியாத அளவு ஏற்பட்டது. அந்த மயக்கத்திலேதான் நடனா, தனது காதல் விளையாட்டைப்பற்றி எண்ணியும், தனக்கு வந்த கஷ்டத்தை எண்ணிக்கலங்கியும் ஜுரவேகத்தால் குளறியும், தனது படுக்கையில் புரண்டு கிடந்தாள். அரமண்மனை வைத்தியர் அற்புதானந்தர், தமது மற்ற அலுவல்களை மறந்து, நடனாவுக்கு அருமையான மூலிகைகளால் முறைப்படி செய்த மருந்து வகைகளை அன்புடன் கொடுத்து "எப்படியும் அவளை உயிர்ப்பிப்பேன், நான் கை பிடித்த பிறகு, மரணம் அவளை அணுகுமா?" என்று

சூள் உரைத்து, இரவு பகல் தூங்காது, நடனவுக்கு அருகே அமர்ந்திருந்து. உபசாரம் செய்யலானர். அடிக்கடி அரசிளங் குமரியும் நடனவைப் பார்த்து விட்டுப் போவாள். வைத்தியரே, "மிக்க ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும், கலே, இளமை, அழகு, தூய்மை யாவும் உம்முடைய மருந்திஞல் தான் பிழைக்க வேண்டும்" என்று கூறுவாள். வைத்தியர், இளித்துக் கொண்டே, "அரசகுமாரி! அடியேனுடைய திறமையை அறியாதார் சொற்பம், ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னல், அருந்தமிழர் கற்ற அரிய முறைகளை நான் அறிவேன்; மூலிகைகளின் இடமும் இயல்பும் தெரிந்தவன்; நோய் மூலங் கண்டறிவேன்; நொடியிலே தீர்ப்பேன்எப்பிணியும். நடனவுக்கு, மனம் குழம்பி இருக்கிறது; மயக்கம் மேலிட்டுக் கிடக்கிறது; பயத்திஞல் பாவை பதறியிருக்கிருள். ஆகவே ஜுரம். இது இப்போது குறைந்து விடும்" என்று கூறி, நடனவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே, "கொஞ்சம் இருக்கிறது போய் விடும் நோய்" என்று கூறுவான். அந்த நேரத்தில் மட்டும், வேருேர் வைத்தியர், அற்புதானந்தரின் நாடியைப் பிடித்துப் பார்த்தாலன்றே தெரியும், காம நாடி கடுவேகமாக அவருக்கு அடித்துக் கொண்டிருப்பது! நடனவின் நோய் குறையக் குறைய வைத்தியரின் நோய் வளர்ந்துகொண்டே இருந்தது. அவ்வளவு வசீகரமான மங்கையின் அருகே யிருந்து, உபசாரம் செய்தவரல்லவைத்தியர். அது வரையில் மணமாகாதவர்; மன்னரின்ஆதரவு பெற்றவர். மயக்கமுற்ற நடனவுக்கு மருந்து தர வரவழைக்கப் பட்டார்; அவளழகைக் கண்டுமயங்கினர். மயக்கத்தைப் போக்க மலேயுச்சியிலிருந்து மூலிகைகள் எடுத்துவரச் செய்தார், ஆனல், பாபம், அவருடைய மனமயக்கத்தைப் போக்கும்மூலிகை அருகேதான் இருந்தது—எதிரே, மஞ்சத்தில்!



பத்து நாட்களுக்குப் பிறகு நடனராணிக்கு நோய் குறைந்தது; மயக்கம் தீர்ந்தது; ஜுரம் நின்றது. வைத்தியர் பூரித்தார். அரசகுமாரி ஆனந்தங் கொண்டாள்; "நோய் போனலும், படுக்கையிலேயே இருக்கவேண்டும்; பாலும் பழரசமும், தேனும் உணவாக இரண்டோர் மாதமிருக்க வேண்டும்; தேகத்திலே ஏற்பட்டுள்ள திடீர்அதிர்ச்சி போக ஓய்வுவேண்டும்; மூன்று வேளேச் சூரணம் முறைப்படி சாப்பிட்டாக வேண்டும்; நான் கூடவே இருந்து உபசாரம் செய்து, குறியறிந்து குணம் செய்யவேண்டும்" என்று குழைந்து கூறினர் வைத்தியர். அவருக்கு, அவளருகே இருக்க, அவளுக்கு உபசாரம் செய்ய, நாடி பார்க்க, நெற்றியிலே அரும்பும் வியர்வையைத் துடைக்க, அவள் அயர்ந்து தூங்கும்போது பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு அவளழகைக் கண்டு பெருமூச்செறிய இரண்டோர் மாதங்களல்ல, இரண்டோர் ஆண்டுகள் சந்தர்ப்பம் கிடைத்தாலும் சலிக்காது! அவ்வளவு இன்பமளித்தது, அவளருகே இருப்பது! ஆகவே, அவர் அரசகுமாரியிடம் கூறி, அந்தப்புரத்திலே, தனி ஜாகையிலே நடனராணி தங்கி இருந்திட வேண்டும்; பலரும் வந்து பேசிடுதல் கூடாது; தன் பார்வையிலேயே வைத்துக்கொள்ள வேண்டும். தனிமையில் இருந்தால், வீரனே எண்ணி விம்முவாள்; உடனே ஓடிப்போன காய்ச்

சில வந்தேனென்று கூறும்; பலரும் பேசினாலோ பதைத்துப் பேசுவாள்; உடல் உரம் கெடும். எனவே, அவளை இங்கேயே தனிமையாக இருக்கச் செய்யவேண்டும், என் சிகிச்சை முறைப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டான். ஒரு பெரிய கோட்டையை முற்றுகையிடும் படை போல, வைத்தியன் நடனாவை முற்றுகையிடுகிறான்; மோப்பம் பிடிக்கிறான் என்பதை அரசகுமாரி அறிந்துகொள்ளவில்லை. அவனது வைத்தியத் திறமையைப் பலரும் வியந்தனரே யன்றி அவனது வயோதிகம் திடீரென வாலிப உணர்ச்சி பெற்று விட்டதை அவர்கள் அறியவில்லை.

நடனாவுக்கோ, வைத்தியரின் விபரீத யோசனை தெரியாது. நோய்க் குறையக் குறைய, அவளுக்கு எப்படி அரண்மனையை விட்டு வெளியே போவது? எங்கெங்கு சுற்றினால் வீரமணி கிடைப்பார்? என்ற எண்ணமே மேலிட்டது. யாரும் தனக்கு உதவி செய்யமாட்டார்கள் என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள். வீரமணி போனாலென்ன! சோழ மண்டலம் ஆண் ஏறுகள் இல்லாத இடமா! என்று கூறுவரே யொழிய, தன் மனநிலையைத் தெரிந்து நடக்கும் தோழியர் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். நன்றாக எழுந்து நடமாடும் சக்தி பெற்றதும், கள்ளத்தனமாக ஓடிவிட வேண்டியது தான் என்ற தீர்மானத்துக்கு வந்தாள். அதைப் பற்றி நினைக்கவும், வெளியே போய் இதைச் செய்யலாம் அதைச் செய்யலாம் என்று யோசனைகள் செய்யவும், நடனாவுக்கு நேரமிருந்ததே யொழிய, வைத்தியரின் நிலைமையைத் தெரிந்து கொள்ள நேரமில்லை.

வைத்தியர், வெளியே போய்வரும் வழக்கத்தைக் கூட விட்டு விட்டார். தோட்டத்துக்குச் செல்வார். மலர் தேடி நடனாவிற்குத் தர! அந்தப்புரச் சமையற்கூடம் போவார் பழம் பால் தேன்கொண்டுவர. நடனாவுக்காகவே! மற்ற நேரத்திலே, அவள் மஞ்சத்திலே, இவர் பக்கத்தில் ஒரு ஆசனத்தில். இந்த நித்யவிருந்து அவருக்கு எவ்வளவோ ருசி தந்தது. ஆனால், கனியைக் கண்டால் பறித்துத் தின்ன வேண்டுமென்ற நினைப்பு அதிகரிக்க அதிகரிக்க, வேலி முள் பாராது; தோட்டக் காவலாளி வருவானோ என்ற பயத்தையும் கவனியாது; பறிக்கத் தூண்டுமல்லவா? எவ்வளவு நாட்கள்தான் அவர் “தவங்” கிடப்பார். கடைசியில் வரங் கேட்டே தீருவது என்ற முடிவுக்கு வந்தார். வீரமணியை மறந்துவிட வேண்டும். வாழ்க்கைக்கு அவன் சரியான வழிகாட்டியல்ல, என்று துவக்கினார். அவளுடைய சலிப்பும் சங்கடமும் அவருக்கு என்ன தெரியும்! மேலும் மேலும், அதே விஷயமாகப் பேசலானார். மெள்ள மெள்ள, அவர் மனநிலையை வெளியிட்டார். நடனா மிரண்டாள்! இது ஓர் புது விபத்து, இதனின்றும் எப்படித் தப்புவேன் என்று திகைத்தாள். நிதானமாகவும், தன் உறுதியைக் காட்டும் விதத்திலும், வைத்தியருக்குக் கூறினாள். முடியாது என்பதை, வீரமணியிடம் கட்டுண்டு கிடக்கும் அந்தக் கொடியிடையாளை, வைத்தியர் தமது வாக்குச் சாதுர்யம் வென்றுவிடும் என்றுஎண்ணித் தமது வேலையை மும்முரமாகச் செய்து வந்தார். ஓர் நாள் விவகாரம் முற்றிவிட்டது. வைத்தியரின் குரலில் வேதனை பிறந்தது. நடனாவுக்கு நடுக்கம் ஏற்பட்டது. வைத்தியர் சிறு குழந்தைக்குப் பெரியவர்கள் புத்திமதி கூறும் பாவனையிலே பேசினார்.

“அவன் ஒரு கொலைகாரன்; நான் இரட்சகன்! அவன்இரத்தம் குடிப்பவன்; நான் ஆபத்பாந்தவன். அவனால் எத்தனையோ, குடும்பங்கள் கோவெனக் கதறின; ஆறுதலும், புன்சிரிப்பும், மகிழ்ச்சியும், நான் அளித்துள்ளேன் பல குடும்பங்களுக்கு, எத்தனையோ மாதர்கள் வயிறெரிந்து அவனைச் சபித்தனர்; எத்தனையோ தாய்மார்கள் என்னைக் கை எடுத்துக் கும்பிட்டு வாழ்த்தி இருக்கிறார்கள் தெரியுமா! எத்தனையோ இளைஞர்களின் வாழ்க்கையை அவன் பாழாக்கினான்; எத்தனையோகுடும்பங்களில் அணைய இருந்த விளக்குகளை நான் அணையாமற் செய்திருக்கிறேன். அவனுடைய கீர்த்தி. எவ்வளவோ, பேர்களைக் கல்லறைக்கு அனுப்பிற்று. அதனை யோசித்துப் பார். இவ்வளவும் நடனா, அவன் ஓர் துரோகி என்பதை மறந்து பேசுவது. அந்தச் செயலையும் கவனித்தால், அவனைக் காண்பதும் தீது என்றே கற்றோர் கூறுவர், கனியே! என்மீது கருணை காட்டு.”

வைத்தியர் பேசினார், அந்த வஞ்சிக்கொடி வேதனையுடன் புரண்டாள். விட்டானா? மேலும் தாக்கினான் வெறிகொண்ட வைத்தியன்.

“கொஞ்சும் கிளியைத் தள்ளிவிட்டு, கொத்தும் வல்லூறை வளர்ப்பார்களா! சேவை புரியும் என்னை உதாசீனம் செய்துவிட்டுச் சாவைத் தரும் அவனை நேசிக்கிறாய். எட்டியை, இனிப்பென்று எண்ணுகிறாய். வேண்டாம் இந்தப் பிடிவாதம். வினயமாகக் கூறுகிறேன், உன் ஏவலுக்கு எதிர் நோக்கி நிற்பேன், உன் விழி எதைக் கூறுமோ அவ்வழி நடப்பேன். நான் மாதரிடம் மையல் கொண்டு அலைந்து திரிபவனல்லன். அந்தப் பருவமும் கடந்தவன். பெண்ணே! நீ மட்டும் என்னை அடிமை கொண்டால்போதும். உன் சேவையே, என் சிந்தனையாகக் கொண்டு வாழ்வேன்.” வைத்தியரின் மொழிகேட்டு, நடனா மனமிக நொந்தாள். அகலத்திறந்திருந்த அவளது கண்களிலிருந்து பெருகிய நீர்த்துளிகள், அவனைக்கண்டு பயந்தோடுவனபோலக் கன்னத்திலே புரண்டன. வேதனையைப் பொறுத்துக் கொண்டு அந்த விவேக சிந்தாமணி வெகுண்டுரைக்காமல் சாந்தமாகவே, “வைத்

(13-ம் பக்கம் பார்க்க)



# காமராசரின் மொழிக் கொள்கை?

அன்புள்ள நண்பா!

"திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு அரசியல் கட்சி அல்ல" என்று காமராசர் எத்தனை முறை கரடியாகக் கத்தினாலும், அப்படிக் கத்துகிருரே என்பதற்காக, அவரை ஒரு அரசியல் வாதி அல்ல என்று நம்மால் மதிப்புத் தராமல் இருக்க முடியாது. நல்ல தேர் அரசியல் வாதி அவர். தேர்ந்த அரசியல் வாணிகம் செய்துகொண்டிருக்கும் ஒரு தெளிந்த ஞானி. உடைந்து ஒழுகிப் போகாத காங்கிரசுக் கட்சியில், அவர் ஒரு ஊழியராக இருந்த காலத்திலும், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் பொறுப்புக்கு வந்திருந்த காலத்திலும், பாவம், முதலமைச்சராக்கி வைக்கப்பட்டிருந்த காலத்திலும், இவற்றை யெல்லாம் வீசியெறிந்து விட்டு, அனைத்திந்தியக் காங்கிரசுக்குத் தலைவராக்கி வைக்கப்பட்டிருந்த காலத்திலும் இந்த அரசியல் வாணிகத்தில் காட்டாத, காட்ட முடியாத அல்லது காட்டத் தெரியாத முறைகளை யெல்லாம், ஸ்தாபன காங்கிரஸ் என்ற பெயரில் பரிதாபத்துக்குரிய கட்சியாக அவர் சார்ந்திருக்கும் நிறுவனம் ஆக்கப்பட்டு விட்ட பின்பு, உண்மையிலேயே இப்போது காமராசர் நல்ல படியாக சரியான அரசியல் நடத்துகிருர் என்பதைப் பாராட்டாமலிருக்க முடியாது.

ஒருவன், இன்னொருவனை வீழ்த்த, அல்லது சரித்துச் சாய்க்க ஏதேனும் முறைகளைக் கையாளும்போது, கற்றறிந்த சிலர், அந்த முறையினை—"அரசியல் பண்ணுதல்" என்று அழைப்பார்கள். பேரறிவாளர்கள் கூறும் இந்த "அரசியல்" என்ற சொல்லுக்கு எவ்வளவு ஆழமான பொருள் உண்டோ, அதில் கொஞ்சங்கூட காரம், மணம், குணம் குன்ருத அளவுக்கு இப்போது காமராசர் தெளிவான 'அரசியல்' கடை நடத்துகிருர் என்பதறிந்து மகிழாமலிருக்க முடியுமா நண்பா!

இந்தவகை "அரசியல்" வாணிகத்தின் மொத்தக் கொள்முதலுக்காக அவர், அண்மையில் சேலத்தில் ஒரு மாநாட்டைக் கூட்டி, கருத்துக்களை யெல்லாம் கொட்டு, கொட்டு என்று கொட்டி விட்டிருக்கிருர். கொட்டப்பட்ட கருத்துக்களைப் பொறுக்கிக் கொள்ள முடிந்த வேகத்தில்தான் கொட்டினுரோ, தெறித்துச் சிதறும் வேகத்தில்தான் கொட்டினுரோ, நமக்குத் தெரியவில்லை. 'நவ சக்தி' கூறுகிறபடி கருத்துக்களைக் கொட்டியிருக்கிருர் என்று மட்டும் தெரிகிறது! தெளிந்த தீர்மானமான பல கருத்துக்களையும் கொட்டியிருக்கிருர். அவற்றில் சிலவற்றைப் பற்றி மட்டும் நாம் அக்கறை காட்டித் தீரவேண்டி யிருக்கிறது. ஏனென்ருல், பாவம் காமராசர் இன்னமும் பரிதாபத்துக் குரியவராகவே இருக்கிருரே என்பதற்காக அல்ல—கொஞ்சம் தெளிவு பெற்ற நிலைக்கு அவரை. அவரைச் சூழ்ந்திருப்பவர்கள் கொண்டு வரவேண்டும் என்பதற்காக!

நண்பா, "The great remarker of nature" என்ற ஒரு நூலில், I. V. மிச்சூரின் என்ற அதன் நூலாசிரியர்

> **We connot wait for favours from nature; we must wrest them from her.**

என்று குறிப்பிட்டிருப்பது, காமராசருக்கு இந்தச்சந்தர்ப்பத்தில் மிகமிகப் பொருத்தமாக இருக்கும்.

பல்வேறு உயர்வர்க்கங்களினுலும் நிலம் உடைமையாக்கிக் கொள்ளப்பட்டு, அவற்றின் பலன் போதிய அளவு மக்களுக்குக் கிடைக்காத சூழ்நிலையில், இயற்கையின் அருள்கொண்டு, பூமாதாவின் அடிவயிற்றிலிருந்து பலன்களைப் பெறவேண்டுமென்ற இதய ஏக்கத்தைத்தான் அந்த ஆசிரியர் இப்படிக் கொட்டிக் காட்டுகிருர்.

> "இயற்கையினிடமிருந்து, அனுகூலங்களுக்காக நாம் காத்திருக்கக்கூடாது; நாம் அவைகளை, அதனிடமிருந்து பறித்துக்கொள்ள வேண்டும்"

என்கிருர் மிச்சூரின். ஜார் ஆட்சிக் காலத்தில் அந்த ருஷ்ய நூலாசிரியருக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவத்திலிருந்து இந்தக் கருத்துப் பிறந்துவிடவில்லை நண்பா! கார்ல் மார்க்ஸின் கருத்துக்கள் முழுமையாக கருவுறும் முன்பு, லெனினது விமர்சனங்களும், விளக்கங்களும் கருக்கொள்ளாக் காலத்துக்கு முன்பேதான் மிச்சூரின் இப்படிக் கூறி இருக்கிருர். பறித்துக்கொள்ள அல்லது பிடுங்கிக் கொள்ளவேண்டும் என்று. ஆனுல் இவர், நிலத்தினடியிலிருக்கும் வளங்களை நாம் வலுக் கட்டாயமாகப் பெறவேண்டும்; முயன்றுழைத்துப் பெற வேண்டும் என்கிருர். காலம் வரட்டும் என்று காத்திருந்தால், பூமித்தாய் ஏமாற்றிவிடுவாள்; காத்திராமல், பிடுங்கிக்கொள் என்கிருர்!

தவருன போதனையல்ல; தீய, விரும்பத்தகாத போதனையுமல்ல இது, இதைப் போலவேதான் நண்பா, காமராசரிடமிருந்து, சில கருத்துக்களை காலம், பலவந்தமாகப் பறித்து நாட்டுக்குப் படைத்திருக்கிறது

[illegible] பொல்லாததாயிற்றே! நம் அறிஞர் பெருந்தகை அவர்களையே பறித்துக்கொள்ளும் அளவுக்குப் பொல்லாத வன்மம் கொண்டதாயிற்றே காலம்! காமராசரை மட்டும் விட்டுவைக்குமா? பற்றிக்கொண்டது! பாவம் காமராசர், பரிதாபத்துக்குரிய காமராசராகி கருத்துக்களைக் கொட்டியிருக்கிறார், கழகத்தினைப் பற்றி!

நண்பா, இந்திய நாட்டு மொழிப் பிரச்னை இன்று நேற்று விளைந்ததா என்ன? தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியுரிமைபெற்றதற்கு அப்புறந்தான் பிறந்திருப்பது போலவும், அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய முழுப் பொறுப்பும் தி. மு. க.வின் கையிலேயே இருப்பது போலவும், இந்த உண்மைகள் எதுவும் மக்கள் மன்றத்துக்குப் புரியாது என்பது போலவும், தானே முன்வந்து புரியவைத்திருப்பது போலவும் ஒரு நாடகமாடி இருக்கிறார், சேலத்தில்! மக்கள் மதிபடைத்தவர்கள் அல்லர் என்ற மமதையிலிருந்து இன்னமும் அவர் விடுபடவில்லை என்று தெரிகிறதே, என்ன செய்வது?

அதனால்தானோ என்னவோ, சில உண்மையான விரும்புத்தக்க கருத்துக்களை மிச்சூரின் கூறியதுபோல, காலம் காமராசரிடமிருந்து பறித்துத் தந்திருக்கிறது.

> "எங்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்.
>
> தென்னாட்டைப் பொருத்தவரை தமிழ்நாடு, கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்கிடையே ஆங்கிலம்தான் தொடர்பு மொழியாக இருந்துவருகிறது.
>
> ஆங்கிலம் போய்விட்டால் இந்தத் தொடர்பு அறுந்துவிடும்.
>
> வடநாட்டில் பல மாநிலங்களில் இந்தி பேசுகிறார்கள். அவர்கள் வேண்டுமானால் இந்தியைத் தொடர்பு மொழியாக வைத்துக்கொள்ளட்டும்.
>
> இந்தியா முழுவதற்கும் ஒரே தொடர்பு மொழி ஏற்பட காலதாமதம் ஆகும்; அதுவரை இந்தி பேசும் மக்கள் காத்திருக்க வேண்டியதுதான்.
>
> மொழிப்பிரச்னை இன்னும் தெளிவுபடவில்லை; பிரதமர் இதுபற்றித் தெளிவுபடுத்தவேண்டும்."

விலை மதிப்பற்ற இந்தப் பொன்னுரையைத்தான் நண்பா, காலம் காமராசரிடமிருந்து பறித்து நாட்டுக்குத் தந்திருக்கிறது.

இந்திதான் இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்று கூறப்பட்ட காலத்திலும்சரி, தேசிய மொழி; ஆட்சி மொழி என்ற அரும்பெரும் அந்தஸ்தினை இழந்து தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்ட காலத்திலும்சரி, முற்றுப்பெற்ற முடிவாக அது இருந்ததில்லை. எந்தப் பிரதமரின் காலத்திலும் இருந்ததில்லை. காங்கிரசின் பிடியில் மத்திய அரசு இருக்கின்றவரையில் முடிவொன்று ஏற்படப்போவதுமில்லை.

காமராசருக்குத் தெரியுமோ என்னவோ, நினைவிலிருக்கிறதோ இல்லையோ, இந்தி என்ற ஒரு வட்டார மொழிக்குத் துணைக்கண்டத்தில் ஏற்றம் தரவேண்டுமென்ற எண்ணம் எழுந்தக் காலத்தில் காந்தியடிகளது உயிர், துப்பாக்கிக் குண்டுகளுக்குப் 'பலி' கொடுக்கப்படவில்லை, அவரது உயிருக்காகக் கோட்சேயிடம் பேரம் பேசப்படவில்லை.

காந்தியார் இந்தியைவிட, இந்துஸ்தானிக்குத்தான் முன்னுரிமை தர விரும்பினார் என்ற வரலாறு இருக்கிறது.

இப்போது வந்துபோன எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான், உருது மொழிக்குத்தான் முன்னுரிமை தரவேண்டும் என்று கேட்டாராம்!

காலஞ்சென்ற குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன்கூட "இந்தி" என்ற வட்டார மொழிக்கு முன்னுரிமை கிடைப்பதை மறுத்து, உருதுவும் — இந்தியும் மணந்துகொண்ட இந்துஸ்தானிதான் வேண்டும் என்றுகூட கேட்டாராம்!

இவையெல்லாம், கைதூக்கல் ஜனநாயகத்தால் முறியடிக்கப்பட்ட பின்புதான் இந்தி ஏற்றம் பெற்றது!

காமராசர், கொடியேந்தி கோஷம் போட்டுக் கொண்டிருந்த காலத்து நிகழ்ச்சிகள் இவை. ஆயினும் நாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க அந்தஸ்த்துக்கு மட்டுமல்லாமல், இடத்துக்கும் ஏற்றி வைக்கப்பட்ட காமராசர் தெரிந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டியவைகள் இவையும், இவை போன்றவையும்.

> மொழிப்பிரச்னை இன்னும் தெளிவுபடவில்லை
> —பிரதமர் இதுபற்றித் தெளிவுபடுத்த வேண்டும்

என்று கேட்கிறாரே காமராசர், அவர் உடைந்து போகாத கலத்தில் உல்லாசப் பயணம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில், கிடைத்த நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் என்றேனும் ஒருமுறை — ஒரே ஒருமுறை—நாட்டு மக்களுக்கு எதிர்காலத்தில் பதில் சொல்லித் தப்பித்துக் கொள்வதற்காகவாவது ஒரு முறை இப்படிப் பேசியதுண்டா?

அனைத்திந்தியக் காங்கிரசுக்குத் தலைவராக இருந்தக் காலத்தில் ஒரே ஒருமுறை

> பிரதமரே, மொழிப்பிரச்னை தெளிவுடன் இல்லை; தெளிவுபடுத்துங்கள்—நாட்டுக்கும், எங்களுக்கும்

என்று எப்போதாவது கேட்டிருக்கிறாரா? பிரதமராயிருந்த நேருவும், அடுத்து வந்த லால்பகதூர் சாஸ்திரியும் தெளிவுடன் வைத்திருந்தார்களா இந்த விவகாரத்தை?

1965-ல் அரசியல் சாசனத்தில் இந்திதான் தொடர்பு மொழியென்று உண்டாக்கிவைத்த பின்பு தமிழ் நாட்டில் 400க்கும் அதிகமான மாணவர்கள்—பொதுமக்களின் உயிரை, அப்போதைய காங்கிரஸ் முதலமைச்சர் "கற்பாறைபோல இருந்து" காவு கொண்ட காலத்திலே, அண்மையில் கேரளாவில் எர்ணுகுளத்திலிருந்து இரவோடிரவாக டெல்லியை நோக்கி ஓடிப்போன காலத்திலாவது, லால்பகதூர் சாஸ்திரியிடம் காதோடு காதாகவாவது

"ஆங்கிலம்தான் தொடர்ந்து ஆட்சி மொழி யாக இருக்க வேண்டும்;

தென் மாநிலங்களது சமுக உறவைத் துண்டித்து விடாதீர்கள்.

காலம் கனியும் வரையில் இந்தி பேசும் நீங்கள் காத்திருங்கள்

என்று கூறுகிற ஆண்மை உணர்ச்சி எழுந்தாவது அடங்கிப் போயிருக்கிறதா? இல்லையே! காமராசரே! தமிழ் மானமும், தமிழ்ப் பண்பாடும் பற்றி உங்களுக்கு எடுத்துக்காட்டியவர்கள் அப்போது உங்களிடத்தில் இல்லாமற்போய்விட்டார்களா?—என்று கேட்கத் தோன்றுகிறது நண்பா!

கடந்த இருபதாண்டுக் காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் ஏகச்சக்ராதிபதியாகஇருந்துவிட்டு இனிமேலும் அப்படி இருக்க இடமில்லை என்று தூக்கி யெறியப்பட்டுவிட்ட பின்பு இப்போதுதான் கண்தெரிந் திருக்கிறது காமராசருக்கு!

மொழிப்பிரச்னை காரணமாகவே, தமிழ்நாடு தங்கள் கரத்தை விட்டுப்போய்விட்டது என்பதைப் புரிந்துகொள்ள இத்தனைக் காலம் பிடித்திருக்கிறது இந்தக் காலா காந்திக்கு!

நண்பா! ஒரு சமயம் காமராசர் கர்னாடக மாநிலம் பெங்களூரிலிருந்து, நல்லதொரு செயலாற்றல் பற்றி விண்அதிர முழங்கினார்!

மத்திய அரசிடமிருந்து தமிழ் நாட்டுக்கு இந்தியில் அறிக்கைகளும், கட்டளைகளும் வரு மானால் தூக்கியெறிவோம்! மதிக்க மாட்டோம்

நல்லறிவு வாய்க்கப் பெற்றுவிட்டவர் போலவும் தமிழக மக்களின் இதயத்தை எதிரொலித்துக் காட்டிவிட்டது போலவும் தெரிகிறதல்லவா நண்பா இந்தப் பேராற்றல்! மறுநாள் காலை டெல்லி சென்ற காமராசர் பாலம் விமான நிலையத்திலேயே,

நான் அப்படிப் பேசவில்லை

என்று மறுத்துவிட்டுத்தான் நகருக்குள் சென்றார். அப் போதுதான் நகருக்குள் செல்ல முடியும் என்ற நிலை, ஒரு நாளைக்குள் அங்கே உருவாகி இருந்தது! நான் அப்படிப் பேசவில்லை என்று மறுத்துவிட்டார்!

அன்றே இரட்டைவேடம் புனைந்து வலம் வந்த காமராசரை, இன்றுமட்டும் நம்பவேண்டுமாம்!

"எங்களைப் பொறுத்த மட்டில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க வேண் டும்"

என்று சேலத்தில் காமராசர் முழங்கியிருக்கிறாரே, நண்பா, இதனைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகம் தோன்றிய நாள் முதல் நாட்டுக்கு வலியுறுத்தி வந்திருக்கிறார் என்பதனை, எத்துணைச் சாதுரியமாக அங்கே மறைக்க முயன்றிருக்கிறார்!

எங்களைப் பொறுத்தமட்டில்

என்கிறாரல்லவா இந்த தேசியத் தலைவர், இவர் யாரை யெல்லாம் "எங்களை" என்ற கூட்டுக்குள் கொண்டு வர விரும்புகிறார்? அல்லது நினைக்கிறார்?

காமராசர்,

தாரகேசுவரி சின்கா,

ராம்சுபாக்சிங்

மற்றும் சில தமிழ்நாட்டார்

மட்டுந்தானா? அல்லது—

காமராசர்,

ராம்சுபாக்சிங்,

தாரகேசுவரி சின்கா,

மொரார்ஜி தேசாய்,

நிஜலிங்கப்பா,

எஸ். கே. பாட்டில்,

விபூதி மிஸ்ரா,

சஞ்சீவ ரெட்டி,

வீரேந்திர பாட்டில்,

சி. பி. குப்தா

முதலான அனைத்துப் பகுதித் தலைவர்களையும், அனைத் துப் பகுதி மக்களையும் உள்ளிட்டா?

அனைத்துப் பகுதியினருக்குமான அறிவிப்புதான் இது என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை, ஏனென்றால்

வடநாட்டில் பல மாநிலங்களில் இந்தி பேசு கிறார்கள். அவர்கள் வேண்டுமானால் இந்தியைத் தொடர்பு மொழியாக வைத்துக் கொள்ளட்டும்.

என்று தெற்கினையும், வடக்கினையும் தனியாகப் பிரித் துக் காட்டி விட்டதோடு,

தமிழ் நாடு,

கேரளம்,

கன்னடம்,

ஆந்திரம்

ஆகிய தென் மாநிலங்களையும் தனியாகத் துண்டித்து வைக்கிறார். இதன் மூலம் நண்பா, ஆங்கிலம்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்ற காமராசரது மொழிக் கொள்கை—

மொரார்ஜி தேசாய்,

நிஜலிங்கப்பா,

எஸ். கே. பாட்டில்,

விபூதி மிஸ்ரா

சி. பி. குப்தா

முதலான வடநாட்டுத் தலைவர்களுக்கு உடன் பாடான கொள்கை அல்ல

என்பதும் தெளிவாகிறது. ஆகவே, சிண்டிகேட் காங் கிரசுக்கு வட்புலத்தி விருப்பவர்கள் இந்திதான் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்று கேட் பார்கள்; தென் மாநிலத்தில் (இப்போதைக்கு காமராசர் மட்டும்) ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கவேண் டும் என்று கேட்பார்!

இதுதானே பொருள்? நாகரிகமான முறையில் விளக்குவதென்றால் இந்த பொருளைத் தவிர வேறுண்டா?

தமிழ் நாட்டுக்கும், மற்ற தென்பகுதி மாநிலங் களுக்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம்தான் இருக்க வேண்டும் என்று இப்போது காமராசர் சொல்வது காலங் கடந்த ஞானோதயம் அல்லவா! இதுபோலத் தமிழகத்தில் சொல்லித் தீரவேண்டிய நிர்ப்பந்தம் அல்லவா இதிலே காணக் கிடைக்கிறது. காலம் அல்லவா இந்த நிர்ப்பந்தத்தை அவருக்கு உண்டாக்கி கருத்தினைப் பிடுங்கித் தந்திருக்கிறது!

தி. மு. கழகம் தோன்றியிராவிட்டால், அதன் அரசியல் மாநாடுகளில் இது போன்ற தீர்மானங்களைப் போட்டு, நாட்டுக்கு விளக்கியிராவிட்டால், இந்த முதுகெலும்பு போன்ற மொழிப் பிரச்னைக்குக் கழகம் ஒரு வடிவம் கொடுத்திராவிட்டால், காமராசர் கூற்று சரியானது; வரவேற்கத்தக்கது என்று ஏற்க முடியும்!

நண்பா, இலக்கிய ஏடுகள் என்றால் உனக்கு நிரம்பப் பிடிக்குமில்லையா! ஐங்குறுநூறு பற்றித்தான் உனக்குத் தெரியுமே! அதில் ஒரு பாடல்! முழுமையும் நினைவிலில்லை. தேவையுமில்லை. பாட்டின் அடிப்பகுதி மட்டுமே போதும். அதில். தலைவனைப் பறிகொடுத்து விட்ட தலைவி சொல்கிறாள்! பறிகொடுத்த என்றால் பலி கொடுத்த அல்ல; இன்னொரு பரத்தைக்குப் பறிகொடுத்துவிட்ட என்று பொருள்,

> "………பஞ்சாய்ங் கோதை மகளிர்க்கு
> அஞ்சுவம் அம்மா வம்முறை வரினே."

என்று நடுங்குகிறாள் நண்பா! ஏன் தெரியுமா? வம்முறை வந்துவிட்டால்…என்கிறாள்! அதற்காக அவள் அஞ்சுவாளாம்! தன்னிடமிருந்து விலகிச் சென்றுவிட்ட தலைவனுக்கு. பஞ்சினும் மென்மையளான அந்தப் பரத்தையினால் ஏதேனும் பழியேற்பட்டு விட்டால், அவனுக்கு நானும் அஞ்சித் தீரவேண்டுமே! என்று கவல்கிறாள்!

இதுதான் நண்பா, காமராசரது இந்த அறிவிப்புக்குக் காரணம்! தானும், தன்னைச் சார்ந்தவர்களும், தமிழக மக்களால் பழி கூறப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக ஒரு பாதுகாப்புத் தேடி வைத்துக்கொள்கிறார்! இனி, தனது அரசியல் தமிழ் நாட்டில்தான் என்பதை காலம் உணர்த்திவிட்ட பிறகு, தமிழ் நாட்டுக்கு என்று தன்னைக் கொஞ்சம் பங்கிட்டுத்தந்திருக்கிறார்.

சிண்டிகேட்டாகட்டும், இண்டிகேட்டாகட்டும், அது காங்கிரஸ், காங்கிரஸ்தான்! அந்தக் காங்கிரசினால் தமிழ் நாட்டுக்கு என்று ஒரு தனி மொழிக்கொள்கையைக் கொடுக்கவே முடியாது! கொடுக்கவும் ஒப்புக்கொள்ளாது வடநாட்டுக் காங்கிரஸ்!

காங்கிரஸ் கொடுக்க முடியாமற்போன காரணத்தினால் தான், கழகம் அந்தக் கடமையை மேற்கொண்டது! மேற்கொண்டது மட்டுமல்ல; நடைமுறைப் படுத்திவிட்டது. கழக அரசு சட்டமன்றத் தீர்மானத்தின் மூலம், அந்தக் கொள்கைக்கு வலுவுண்டாக்கி வைத்திருக்கிறது!

தமிழ் நாட்டில், மாநில அரசின் மூலமாக இனி இந்தி எந்த வடிவத்திலும் நுழைய முடியாது; நுழையவும் வழியில்லை! மத்திய அரசும், துணியும் வக்கிலில்லை! எனவே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் வேலியிடப் பெற்றுவிட்ட ஒன்று!

இவை காமராசருக்குத் தெரியாமலா இருக்கின்றன? கழக அரசு, இந்திக்கு எதிரான பலத்த தடை மதிலாக இருந்து கொண்டிருக்கிறது என்பதைப் புரியாதவரா அவர்?

என்றாலும், தமிழ் நாட்டில் பழி வந்துவிடுமோ என்ற அச்சத்தால், அடிகோலிக் கொண்டிருக்கிறார். மாநாடு கூட்டிவைத்து சொல்லி இருக்கிறார்!

> விளைவுகள், ஏற்கெனவே பிளவுண்ட காங்கிரசில் இன்னொரு பிளவை உண்டாக்கி விடக்கூடும்!

என்றாலும் துணிந்து வெளியிட்டிருக்கிறார்; பரிந்து தந்திருக்கிறது காலம்! எவ்வளவு உயரத்திலிருந்து எவ்வளவு, ஆழத்தில் தள்ளிவிடப் பட்டிருக்கிறார்! எனவேதான், காமராசர், காங்கிரசையே அறைகூவலுக்குஅழைத்திருக்கிறாரோ என்றும் எண்ணத்தோன்றுகிறது! எப்படியானால் என்ன!

> தி.மு.கழகத்தின்மொழிக்கொள்கையையே, காமராசர், கழகம் ஒரு அரசியல் அமைப்பல்ல என்று கூறிக்கொண்டே, தன் காங்கிரசின் கொள்கை என்று பிரகடனப்படுத்திக்கொண்டிருக்கிறார்,

> தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் இதைவிட வேறொரு கொள்கை இருக்கமுடியாது.

> இந்தக் கொள்கையைக் கழகம், ஏற்கெனவே செயற்படுத்திவிட்டது.

> எனவே, காமராசரின் மொழிக்கொள்கை ஒரு ஏமாற்றுக் கொள்கை!

ஆகவே நண்பா, புதுமையற்ற ஒன்றைக் காட்டி, தமிழக மக்களை ஏமாற்ற வந்திருக்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்!

சேலத்தில் பேசிய தாரகேசுவரி அம்மையார், காமராசர் ஒரு தேசியத் தலைவர் என்று கைதட்டல்களுக்கிடையே பேசினாராம்! அதை நாம் ஒப்புக்கொள்வதாயிருந்தால், காமராசரது மொழிக்கொள்கை தமிழக மக்களை ஏமாற்றுவதற்காகத் தரப்பட்டது தான் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும்!

அல்லது, முன்பே குறிப்பிட்டதுபோல் தன்னைப் பழிவாங்கிய காங்கிரசுக் கட்சியை, தமிழக மக்களது உணர்ச்சியினைத் தூண்டிவிட்டுப் பழிவாங்க நினைக்கிறார் என்பதையாவது புலப்படுத்தித்தீரவேண்டும்.

இவைகளில் எதுவும் நடைபெறவில்லையென்றால், சேலம் மாநாட்டுப் பேச்சுக்களை, வடபுலம் சென்று மறுத்துவிடும் நாளினை ஆவலுடன் எதிர்பார்க்கவேண்டும்! அதுவுமில்லையென்றால் வடநாட்டிலிருந்து குட்டுப்பட்டுத்திரும்பும் பரிதாபத்தை எதிர்பார்க்கவேண்டியது தான்.

எதுவுமே இல்லையென்றால், காமராசரது மொழிக்கொள்கைதான் சிண்டிகேட் காங்கிரசின் மொழிக்கொள்கையென்றால், வடபுலத்துக் காங்கிரஸ், இந்தி வெறியர்களால் மீளமுடியாத ஆழத்தில் புதைக்கப்படும் என்பதையாவது தற்காலிகமாக எதிர்பார்க்கவேண்டும்! தயாராகிக்கொள் நண்பா!

கழகத்தைப் பற்றிய காமராசரது குற்றச்சாட்டுக்கள் பற்றியும், அறிஞர் அண்ணாவின் அரசியலை, காமராசர் கைகொள்ளத் தொடங்கிவிட்டிருக்கும் பாங்கு பற்றியும் அடுத்த கிழமை ஆராய்வோம்!

அன்புள்ள,

திருவாரூர் [illegible]

# நீயும் ஒரு தந்தையா?

—கமலாமணாளன்

கையெழுத்திலிருந்தே கடிதம் யார் எழுதியது என்பதைக் கண்டு கொண்டார் திருநாவுக்கரசு. அவர் மனம் கலங்கியது!

அக்கடிதம் ஒரு கூரிய கத்தி போல அவரை அச்சுறுத்தியது. அதன் 'உள்ளடக்கம்' தம்மைக் குத்திக் கொன்றுவிடும் என்று ஒரு கணம் திருநாவுக்கரசு பயந்தாராயினும், அதிலிருந்து தாம் தப்பிக்க முடியாது என்பதைத் தெரிந்து கொண்டதினால் அதைப் படிப்பதற்காக ஆயத்தமானார் அவர்.

இரண்டு மூன்று முறை இப்படியும், அப்படியும் அதை ஒரு பயங்கரப் பொருள்போலத் திருப்பிப் பார்த்துவிட்டு மேசைமேலிருந்த கத்திரியினால் அதன் ஒரு ஓரத்தைச் சன்னமாகக் கத்தரித்து உறைக்குள்ளிருந்த நீண்ட, கனமான கடிதத்தை உருவியெடுத்து மிகுந்த மன உளைச்சலுடன் அதைப் படித்தார் அவர்.

அன்புள்ள அப்பாவுக்கு...

'தேவரீர்' என்று பணிவாக எழுத வேண்டிய நான், அதற்குரிய பந்தத்தையும், புனிதத்தையும் நீங்கள் இழந்துவிட்டதாக நான் கருதுவதால் 'அன்புள்ள' என்று எழுதியுள்ளேன். சொல்லப் போனால் 'அன்புள்ள' என்ற இந்த பதத்தைக் கூட வெறும் சம்பிரதாயத்திற்காகத் தான் உபயோகித்திருக்கிறேன். இந்த வார்த்தையைக் கூடப் போடாமல் வெறும் 'மொட்டை'யாக எழுதுவதற்கு, என்ன இருந்தாலும் நீங்கள் என்னைப் பெற்று வளர்த்தவர் என்பதனால், எனக்குச் சங்கடமாக இருக்கிறது. இதற்கே எனக்குச் சங்கடமாக இருக்கிறது என்றால், மற்ற விஷயங்களைச் சொல்ல நான் எவ்வளவு சங்கடப் படுகிறேன் தெரியுமா? உண்மையை மறைக்க என்னால் முடியவில்லை. என் மனச் சாட்சிக்கு அது ஒரு பெரும் சுமையாக இருக்கிறது. 'மனச் சாட்சி' என்பது உங்களைப் பொறுத்தவரை வெறும் அர்த்தமற்றதும், கேலிக் கூத்தானதுமான சொல் என்று எனக்குத் தெரியும். மனச் சாட்சிக்கு நீங்கள் எந்த அளவுக்கு மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறீர்கள் என்பதும் நான் அறிந்ததேயாகும். சொல்லப் போனால், மனச் சாட்சி என்பதாக ஒன்று உங்களுக்கு இருப்பதாகக் கூடச் சொல்ல முடியாது.

இந்தக் குறுகிய கால வாழ்க்கையில் நான் வளர்ந்த முறை—இல்லையில்லை நீங்கள் என்னை வளர்த்த முறை—, குறைந்த பட்சம் இதற்கு மட்டும் உங்களுக்கு நான் கடப்பாடுடையவனே—, எனக்கு இந்த மனச்சான்றை மட்டுமாவது விட்டு வைத்திருக்கிறதே என்று நினைக்கும் போது எனக்குச் சற்று ஆறுதலாகவும், பெருமையாகவும் இருக்கிறது. முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது.

சிறு வயதில் அம்மா இறந்ததும் என்னை 'லவ்டேல் லாரன்ஸ்' கல்லூரியில் கொண்டு போய்ச் சேர்த்தீர்கள். என் அம்மாவைப் பற்றி நான் நினைக்கும்போது எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கிறது! ஓ! அம்மா! அன்பின் பெட்டகமாக இருந்த என் தாயை நான் எப்படி மறப்பேன்? அம்மா இருந்தால் எனக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்குமா என்று நான் உங்களைக் கேட்க வரவில்லை. என் மனதிற்குள்ளாகவே நான் கேட்டுக் கொள்கிறேன். 'லவ்டேல்' கல்லூரியில் என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்தபோது நான் என்ன உணர்ச்சி கொண்டிருந்தேன் என்றோ, பரீட்சை எல்லாம் முடிந்து கல்லூரியைவிட்டு நான் 'இன்றுள்ள நிலை'யில் வீட்டுக்கு வந்தபோது என்ன எண்ணியிருந்தேன் என்றோ நான் இப்போது சொல்வதால் என்ன பயன் விளையப்போகிறது...?

அன்று, 'அன்பான அப்பாவுக்காகவாவது' வாழவேண்டும் என்ற தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும்—குறைந்த பட்சம் நான் கற்ற கல்வி எனக்கு இந்தத் தைரியத்தையாவது அளித்திருக்கிறதே என்று திருப்திப்படுகிறேன்—நான் வீட்டுக்கு வந்தேன். ஆம், கல்லூரி இறுதியாண்டில் நடந்த கால்பந்துப் போட்டியில் நான் கலந்துகொண்டு விளையாடி வெற்றி பெற்றதும், அப்போது ஏற்பட்ட விபத்தில் நான் காலில் காயம்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதும், வலது காலை இழந்த நிலையில் அக்குளில் ஊன்று கோலுடன் மருத்துவ மனையிலிருந்து வெளி வந்ததும் உங்களுக்குத் தெரிந்தது தான். ஆனால் அந்தக் கொடுமை நடந்தபோது நான் தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்று தான் முதலில் நினைத்தேன் என்பது உங்களுக்குத் தெரியாது. தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தை உடனே என் மனதிலிருந்து அடியோடு துரத்தி விட்டேன் என்றால் அதற்கு "எனக்காக அப்பா இருக்கிறார்" என்கிற நம்பிக்கைதான் காரணமாயிருந்தது அப்படி அன்றே நான் தற்கொலை செய்து கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று இப்போது யோசிக்கிறேன்! அப்படி நான் தற்கொலை செய்து கொண்டிருந்தால், வெளியே சொல்லக் கூசும் மானக்கேடான விஷயங்கள் நடக்கவும், என் மனம் வேதனைப் படவும் அதனால் உங்களுக்கு இது போன்ற ஒரு கடிதம் எழுதவுமான துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டிருக்காதே என்றுதான் வருத்தப் படுகிறேன். இது வெறும் அர்த்தமற்ற வார்த்தைகளாக பிதற்றல்களாகத்தான் உங்களுக்குத் தெரியும் என்பதை நான் அறிவேன்.

ஆனால், நான் சொல்லவந்த விஷயத்தைச் சுற்றிவளைக்காமல்நேரிடையாகவே சொல்ல வேணும் என்கிற துடிப்போடுதான் இக்கடிதம் எழுதத் துவங்கினேன் என்றாலும், எழுதிக்கொண்டிருக்கிற போதே எனது 'பலவீனம்' எனக்குப் புரிகிறபடியால் எழுதாமலே விட்டு விடலாமா என்றும் நினைத்தேன். நினைப்பு நினைப்புகளாகவே நின்றுவிட்டன. அப்படி விட்டு விடுவதால் உங்கள் கேவலமான செய்கை எனக்குத் தெரியாது என்கிறதாக ஆகிவிடும் என்பதாலும், 'எழுத்து' மூலமாவது எனது ஆண்மையை நான் வெளிப் படுத்தாவிட்டால் நான் உங்கள் மகன் என்பதற்கு என்ன 'மதிப்பு' இருக்கிறது என்பதாலும் எழுதியே தீருவது என்றே துணிந்து எழுதுகிறேன்.

நான் கால் ஒடிந்த நிலையில் வீட்டுக்கு வந்தபோது என்னைக் கவனிப்பதற்காக வென்று அமர்த்தப் பட்ட பெண்ணை, பின்னால் அவள் எனக்கு ரொம்பவும் அனுகூலமாக இருப்பாள் என்று சொல்லி அவளை எனக்குக் கட்டிவைக்கும் யோசனையைத் தெரிவித்தபோதே நான்

எதிர்த்தேன். எனது நிலைமையை விளக்கியும் கேட்காமல் உங்கள் சொந்த இஷ்டப்படி அவளை—நிர்மலாவை—எனக்குத் திருமணம் செய்து வைத்தீர்கள். அது தந்திரமான ஒரு ஏற்பாடு என்று எனக்குப் பிறகுதான் தெரிந்தது. நான் அவளுக்கு ஒரு சரியான கணவனுக இருக்கவில்லை என்பது சரியா, அல்லது அவள் எனக்குப் பொருத்தமான மனைவியாக இருக்கவில்லை என்பது சரியா என்று கேட்டால், என்னைப் பொறுத்தவரை இரண்டாவது காரணம் நியாயமான, ஒப்புக்கொள்ளக்கூடியதான உண்மை என்று சொல்வேன். இதற்குக் காரணம் எது, அல்லது எவர் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒருவேளை அது உங்களுக்குத் தெரியாவிட்டால் இவ்வளவு தூரம் கடிதம் எழுத முற்பட்ட நான அதையும் கொச்சையாக எழுதித் தெரிவிப்பதால் என்ன குடிமுழுகிவிடப் போகிறது? அதற்குக் காரணம் நீங்கள்தான் என்று நான் குற்றம்சாட்டும்போது உங்கள் சுருக்கங்கள் விழுந்த முகத்தில் ஏற்படும் விகாரமான உணர்ச்சிகளை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது!

எனக்குத் தாதியாக நியமித்தவளை—பிறபாடு எனக்குத் தாரமாகக் கட்டி வைக்கப்பட்டவளை—நீங்கள்... அய்யோ...என் பேனு அதை எழுதவே கூசுகிறதே...என் மனைவியை—உங்கள் மருமகளை— நீங்கள் 'வைப்பாட்டியாக' வைத்துக்கொண்டீர்களே இந்த 'இரகசியம்' எனக்குத் தெரியாது என்று நீங்கள் மட்டுமல்ல, எனது மனைவி என்ற ஸ்தானத்தில் இருந்த அவளும் நினைத்துக்கொண்டு உங்கள் மனம் போன போக்கில் ஆட்டம் போட்டீர்களே, என்பதை நினைக்கும்போது ஒரு பக்கம் எனக்கு அவமானமாகவும், மறுசமயம் ஆத்திரமாகவும் இருக்கிறது. உங்கள் கேவலமான செய்கைக்கு என்னை ஒரு ஜாக்கியாக வைத்துக்கொண்டு நிர்மலாவை என் மனைவி என்று ஊராருக்குக் காட்டிவிட்டு அவளை உங்கள் 'வைப்பாக' வைத்துக்கொண்டு என்னையும், ஊராரையும் ஒரே சமயத்தில் ஏமாற்றிக்கொண்டு வருகிற உங்கள் ஆபாச நடத்தையை—அற்பச் செயலை — நான் எப்படிப் பொறுக்க முடியும்? இவ்வளவு காலமாக உங்கள் அர்த்தமற்ற பெருமைக்காகப் பொறுத்துக் கொண்டேன். அப்படிப் பொறுத்துக்கொண்டதையே உங்கள் செயலுக்கு அஸ்திவாரமாக வைத்து நீங்கள் தொடர்ந்து நிர்மலாவுடன் காமக் களியாட்டம் ஆடினதற்கு அத்தாட்சியாக இப்பொழுது அவள் வயிற்றில் 'புழு' வளருகிறது என்பதும், அதற்கு அப்பனுக என்னை ஆக்கலாம் என்று நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததும் எனக்குத் தெரிந்தபோது, அப்பா என்னைப் பெற்றவனே, நீங்கள் எனக்குச் செய்த கொடுமைக்கு எல்லாம் சிகரம் வைத்ததுபோல இது இருக்கிறதே என்பதாலும், என் தன்மானம் இந்தக் கேவலத்துக்கு இடம் கொடாததாலும் நான் வீட்டைவிட்டுப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்துவிட்டேன்.

வெளியில் உங்கள் ஒழுக்கம் என்ன, அந்தஸ்து என்ன நீங்கள் மேடைதோறும் ஒழுக்கத்தைப்பற்றியும், தர்மத்தைப்பற்றியும் பெரிய மனிதர்கள் மத்தியில் செய்யும் பிரசங்கம் என்ன? ஆனுல் என் விஷயத்தில் — இல்லையில்லை — உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் கடைப்பிடிப்பது என்ன? ஏன் இந்த வெளிவேஷம்? ஏன் இந்த இரட்டை வேஷம்? நீங்கள் நிர்மலாவையோ, அல்லது வேறு யாராவதையோ பகிரங்கமாகக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் நானே அதை வெளிப்படையாகப் பாராட்டியிருப்பேனே. அதைவிட்டு விட்டு ஏன் இந்தக் குறுக்குவழியில் ஓடினீர்கள்? இதற்கெல்லாம் நீங்கள் சரியான காரணம் காட்ட முடியாது. உங்கள் 'ஜவாப்' எதுவாக இருந்தாலும், இனிமேலும் நான் இங்கிருப்பது என்னைக் கொலைகாரனுக ஆக்கிவிடுமோ என்று பயந்ததால் உடனடியாகப் போய் விடுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

வீட்டை விட்டுப் போகும் நான்—நொண்டிக்காலனுன நான்—நிச்சயமாக என் உயிரை மாய்த்துக் கொள்ளப் போவதில்லை. மாருக நான் வாழவே போகிறேன். எங்கே, எப்படி என்பதைப் பற்றி நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. இப்பரந்த உலகில் எனக்கு வாழ ஒரு வழி இல்லாமலா போகும்? நான் உயிருடன் இருக்கிறேன் என்றும், நான் ஓடி வந்ததற்கு நீங்கள் எனக்கு இழைத்த துரோகமே காரணம் என்பதையும் நீங்கள் கட்டாயம் உணர்ந்து கொள்ளவேண்டும் — உங்களுக்கு நான் உணர்த்த வேண்டும்—என்பதற்காகவே இதை மறக்காமல் குறிப்பிட வேண்டியதாயிற்று. அப்படி நான் உணர்த்தவில்லை என்ருல் உங்கள் கயமைத்தனம் எனக்குத் தெரியாது என்று நீங்கள் இருவரும் நினைத்துக் கொள்வதோடு, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அப்பனுக எனக்குப் பட்டம் கட்டவும் செய்வீர்கள். நான் மேற்கொண்டு உங்களுக்கு மகனுக

## காமராசரின் மொழிக்கொள்கைக்கு



## மொரார்ஜி தேசாயின் பதில்!

"இந்தி மட்டுமே ஆட்சிமொழியாகும்; அந்த இடத்தில் ஆங்கிலத்தை ஏற்கமுடியாது.

இந்தி வெறியர்களும், இந்தியைப் பரப்ப நினைப்பவர்களும் தென்னுட்டுக்குச் சென்று, அங்குள்ள இந்தி பேசாத மக்களுக்கு, அவர்களது தாய் மொழிமூலம் இந்தியைக் கற்பிக்கவேண்டும்.

இந்தியாவின் ஆட்சிமொழியாக இந்திதான் ஆகப்போகிறது; இந்தியை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவேண்டும்.

அன்னிய மொழியான ஆங்கிலம் வளமுள்ளதாக இருக்கலாம். அதை இந்திய மக்கள் தங்கள் ஆட்சிமொழியாக ஏற்கமாட்டார்கள்.

—மொரார்ஜி தேசாய், காசி இந்தி பிரசார சபாவில் பிப்ரவரி 9-ம் நாளன்று பேசியது.

இருக்க விருப்பமில்லை — உங்களை அப்பன் என்று சொல்லிக்கொள்ள எனக்கு அருகதையுமில்லை — அவமானமாகவும் இருக்கிறது! உங்களைப் பொறுத்தவரை இது சர்வ சாதாரணமானதாக இருக்கலாம், எனக்கு இது அசாதாரணமானதாயிற்றே!

நான் வீட்டை விட்டுப் போவதற்கு முன்பு நான் அவள் கழுத்தில் கட்டிய தாலியைக் கழற்ற எவ்வளவோ முயன்றும் அதைச் செய்ய முடியாத அசக்தனாகிவிட்டேன். தாலி ஒரு புனிதமான பந்தம்...... புனித பந்தத்தை இழந்த அவள் கழுத்தில் இனியும் அது இருப்பது சரியில்லை. நான் போன பிறகு நீங்களாவது அதைக் கழற்றி எறியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்—இது தான் நான் உங்களிடம் கேட்கும் கடைசி உதவி. ஏனெனில் அவளுக்குப்பிறக்கப்போகும் குழந்தைக்கு அப்பன் நான் இல்லை—நீங்கள்தான் —என்பதைப் பகிரங்கமாக நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

மிகவும் தெளிவாக இல்லாவிட்டாலும், வெளிப்படையாக வெளினும் சொல்ல வேண்டியதை எல்லாம் ஒரு வழியாக நான் சொல்லி விட்டேன்.

இனி எனக்குச் சொல்ல வேண்டியதற்கு ஒன்றுமில்லை என்பதால் கடிதத்தை இதோடு முடித்துக் கொள்கிறேன். இதுவே மகன் என்கிற நிலையில் அப்பனுன உங்களுக்கு நான் எழுதும் இறுதிக் கடிதமாகும்.

இப்படிக்கு,
உங்கள் மாஜி மகன்,
மாணிக்கவாசகம்.

ஒரு வழியாக அந்த நீண்ட கடிதத்தைப் படித்து முடித்தார் திருநாவுக்கரசு. அவமானத்தால் கறுத்துப் போயிருந்த தன் முகத்தில் துளிர்த்த வியர்வையை மேல் துண்டால் துடைத்து விட்டுக்கொண்டார். அந்தச் சமயத்தில் அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது! இரண்டு கைகளாலும் நெஞ்சைப் பலமாக அழுத்திப் பிடித்துக்கொண்டார்!

அப்போது—

அடுத்த அறையிலிருந்து 'குவா குவா' என்ற சிசுவின் அழுகுரல் கேட்டது. ஒரு பணிப்பெண் ஓடி வந்து 'ஆண்குழந்தை' என்று கத்தினுள். இதைக்கேட்டு ஏதோ ஒரு தவிப்புடன் எழுந்த திருநாவுக்கரசு, தடாலென்று தரையில் சுருண்டு விழுந்தார்!

அவர் முகத்தில் பிரேதக்களை தட்டியிருந்தது!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

தியரே! நல்ல மருந்துகள் இருக்கலாம்; ஆனுல் நாடிப் பரீட்சை தெரியவேண்டியது முக்கியமல்லவா? இல்லையேல், எந்த மூலிகை கிடைத்தும் என்ன பயன்? எந்த முறை தெரிந்தும் என்ன பிரயோசனம்? என் மனம் நாடுவது யாரை என்பதைக் கண்டறியாமல், உமது மனம்போன போக்கின்படி மொழிக்கு வழி விடுகிறீரே, அது சரியா! நான் முழு மனதுடன் காதலிக்கும் அன்பரின் வீரத்தைக் கேலி செய்கிறீர், உமது பேச்சைக் கேட்ட பிறகு நீர் தந்த பச்சிலைப் பாகின் கசப்பு எனக்கு இனிப்பாகத் தோன்றுகிறது! ஈட்டிக்கும், வாளுக்கும், வேலுக்கும், சூலத்துக்கும் கணைக்கும், கழிக்கும் இடையே நின்று, போரிட்டு வெற்றி பல கண்ட வீரரை, நீர் கொலைகாரர் என்று கடிந்துரைக்கிறீர். தணலிலே வெந்து வெளியே வந்த தங்கமல்லவா அவர். அவருடைய உயிர் குடிக்க எத்தனை கூரிய வாட்கள் துடித்தன. எவ்வளவு அம்புகள் அவர் உடலைத் தைத்தன. உடலிலே எத்தனை வடுக்கள்! தேர்ச்சக்கரம், யானையின் துதிக்கை, குதிரையின் காற்குளம்பு, கோபங்கொண்ட வீரர்களின் ஆயுதம் இவைகட்குத்தப்பி வீரமாக வெற்றிக்கொடி நாட்டிய வரையா நீர் தூற்றுவது, உமது பொருமையும், துவேஷமும், போக உணர்வும் போக்க ஏதேனும் மருந்து கிடைக்கவில்லையா"? என்று கூறினுள்.

வைத்தியனின் முகங் கோணிற்று; அகமோ ஆத்திரக் கூடாயிற்று. உடல் பதைக்க நின்ருன் அவள் எதிரில்.






தெளிவு—துணிவு — கனிவு — இவைகளில், ஒவ்வொன்றைப் பழுதறப் பெறுவதே கடினம். ஆயின், நமக்கோ இம் மூன்றும் ஒரு சேர இருத்தல் வேண்டும்—அஃதே, நாம் மேற்கொண்டுள்ள அறப் போருக்கு, உரிய படைக் கலனுகும். உன் மனதை வாட்டிடும் எந்தப் பிரச்சினையாயினும் சரி, தெளிவு கிடைக்கும் அளவுக்குச் சிந்திக்க வேண்டும்—கசடு அற— தெளிவு கிடைத்ததும், அதனின்றும் எழும் ஓர் உன்னதமான வலிவே, துணிவு ஆகித் துணை நிற்கும்! துணிவு பெற்றதும், ஓர் துடிப்பு உணர்ச்சி இயல்பாக எழும்! அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏனெனில், தேக்கி வைக்கப்பட்ட மின்சாரமே, பிறகு ஒளி தர, ஒலி தர, விசையாகி நிற்கப் பயன்படும்! அதுபோலவே, தெளிவால் கிடைக்கும் துணிவு, நமக்காக மட்டுமல்ல, நம்மோடு இருந்துவிட அல்ல, மற்றவர்களுக்கும் அளித்திட வேண்டுமெனில், கனிவு இருத்தல் வேண்டும்! கனிவு என்ற சொல்லிலே, கனி காண்கிருய் அல்லவா. தம்பி! சுவை!! ஆம்! இனிமை!!

# உறுதிகொளல் வேண்டும்!

கடித்திங்கு உண்டதனுல் இனிப்புத் தந்த
　　கன்னலதைக் கண்டவர்கள் பல்லோர் உண்டு!
படிக்குங்கால் இனிப்பதனைத் தரவும் வல்ல
　　பண்புள்ள எழுத்தாளர் யார்தான் உண்டு?
துடிக்கின்ற உள்ளத்தை எழுத்தாய் மாற்றி
　　துணிவாக உலகுக்கு எடுத்துக் காட்டி
கடிதத்தை தம்பிக்குக் கிழமை தோறும்
　　கனிவோடு வரைந்திட்ட அண்ணு உண்டு!

பொருள்கொடுத்து வாழ்வினிலே இருளை நீக்கும்
　　பொன்மனது கொண்டோர்கள் பல்லோர் உண்டு!
இருக்கின்ற ஏழையரின் உள்ளம் தன்னில்
　　இருள்நீக்க வல்லோர்கள் யார்தான் உண்டு?
கருத்தான உரைசொல்லி மக்கள் கூட்டம்
　　கனிவோடு திருந்திடவே வழியைக் காட்டி
உருவான பகுத்தறிவு மலரச் செய்த
　　உத்தமராம் அண்ணுவும் இருந்த துண்டு!

கலையாலே மக்களுளம் தன்னில் நின்ற
　　களைப்புதனை நீக்குதலைக் கண்ட துண்டு!
விலையற்ற மக்களுளம் தன்னை இங்கு
　　விலையாகக் கொண்டவர்கள் யார்தான் உண்டு?
மலையான கருத்துகளை கலைகள் மூலம்
　　மக்களுளம் தனிலென்றும் வாழச் செய்து
நிலையான அரசுதனை தமிழகத்தில்
　　நிலைநாட்டிச் சென்றிட்ட அண்ணு உண்டு!

அலைஅலையாய் கடல்நீரும் துள்ளல் போன்றே
　　அறிவலையால் மக்களுளம் துள்ளச் செய்து
தலைவனெனும் தகுதிக்கு உண்மை யோடு
　　தரணிதனில் இலக்கணமாய் வாழ்ந்து காட்டி
சிலையாக இன்றிங்கு நின்று கொண்டு
　　சிந்தையிலே என்றென்றும் இறையாய் நின்று
நிலையான புகழுடம்பு நாட்டிச் சென்ருர்
　　நினைக்குங்கால் சென்றதுவே ஆண்டு ஒன்று!

—அ. நக்கீரன்.

# கல்லாதவள்

கற்றுணர்ந்த சான்ருேர்தம் வாக்கைக் கற்ருய்;
　　கலைவல்லார் உணர்வுவெளிப் பாட்டைக் கற்ருய்;
முற்றுணர்ந்தார் ஞானமெலாங் கற்ருய்; நந்தம்
　　முத்தமிழின் நயமெல்லாங் கற்ருய்; வீட்டின்
பொற்றிருவாய் இலங்கவுமே கற்ருய்; ஆனுல்
　　புலவேலின் கயற்கண்ணி! நீயோ என்றன்
இற்ருெழியும் நெஞ்சின்சீர் காதற் பாரம்
　　இறக்கிடவே மட்டுந்தான் கற்ரு யில்லை!

பன்னூறு காதத்திற் கப்பா லுள்ளார்
　　பயிற்றுவித்த ஆங்கிலத்தைக் கற்ருய்; அந்த
அன்னியர்தங் கலைமுறையும் வாழ்வின் போக்கும்
　　ஆய்ந்தறிந்து கசடறவே கற்ருய்; நந்தம்
முன்ஞேர்கள் எண்ணற்ற நூற்றின் ஆண்டாய்
　　முடிபுற்ற கருத்தெல்லாங் கற்ருய்; ஆனுல்
உன்னத்தான் துடிநெஞ்சின் நோயை ஆற்றும்
　　ஒருமருந்தே! கயற்கண்ணி! கற்ரு யில்லை!

[illegible]
　　கதையளக்கும் ஒருகலையுங் கற்ருய்; என்றும்
மெய்கூறும் அறிவியலைக் கற்ருய்; நல்ல
　　மேதக்க கணிதமுமே கற்ருய்; ஒவ்வாப்
பொய்கூறும் பேராயக் கட்சிக் காரர்
　　புளுகெல்லாம் முறியடிக்கக் கற்ருய்; ஆனுல்
நெய்யூறும் நின்னிதழால் என்னைக் கவ்வும்
　　நினைப்பைத் தான் கயற்கண்ணி! கற்ரு யில்லை!

நகநுனியில் மருதாணிச் சேர்க்கக் கற்ருய்;
　　நகைவாயில் ஒண்டாரளம் ஒளிரக் கற்ருய்;
புகும் அம்பு விழியெல்லாம் போரே கற்ருய்;
　　புத்தழகு மேனியெலாம் விதைக்கக் கற்ருய்;
அகமெல்லாம் குடிமேவி என்னை வாட்டும்
　　அருந்தொழிலும் கயற்கண்ணி! கற்ருய்; ஆனுல்
முகைமார்பின் தண்முயக்கால் என்னைக் கட்டி
　　மூழ்கவைக்கும் அருளைத்தான் கற்ருய் இல்லை!

—தென்னன்.

# உதயம்

கங்குல் மறைந்திட காரிருள் நீங்கிட
　　கதிரவன் வந்தாச்சு—இருள்
　　உதிர்ந்தே மறந்தாச்சு.

பொங்கும் மகிழ்ச்சியே எங்கும் நிறைந்திட
　　புள்ளினம் பறந்தாச்சு—துயர்
　　உள்ளமும் துறந்தாச்சு.

எங்கும் சுழன்றிடும் எண்ணப் படகதும்
　　என்னை மறந்தாச்சு—எழிற்
　　பெண்ணை நினைத்தாச்சு.

மங்கல கீதமாய் மாறி யொலித்திடும்
　　இன்னிசை நிறைந்தாச்சு—தேனீ
　　தன்னிலை மறந்தாச்சு.

முத்து நகையுடன் மொய்க்கும் இளந்தளிர்
　　தென்றல் சிரித்தாச்சு—உடன்
　　மன்றல் விரித்தாச்சு.

கொத்துக் கனியினைத் தின்னும் கிளிகளும்
　　உள்ளம் களித்தாச்சு—எங்கும்
　　இன்பம் தெளித்தாச்சு.

முத்தம் அளித்திட துள்ளி விரைந்திடும்
　　மோகம் கொண்டாச்சு—உயிர்த்
　　தேகம் உண்டாச்சு.

சித்தம் மயங்கி நித்தம் வருபவள்
　　காலை மலர்ந்தாச்சு—துயர்ச்
　　சோலை உலர்ந்தாச்சு.

—கலைச்செல்வன்.

### கவர்ச்சி புன்னகை!

கருவிலே உருவாகி வரும் குழவி, காலால் உள்ளே மெள்ள உதைத்திடுவது உணர்ந்து கவர்ச்சி மிகு புன்னகை புரிவாள், பூவை! தென்னகம் பொன்னகம் என்ற கருத்துக்கு நெஞ்சிலே இடமளித்துள்ளோர் அனைவரிடமும் காணப்படும் புன்னகை, அத்தகையது.

# அடிப்படை உரிமைக்கு அர்த்தம்தான் என்ன?

"அரசியல் சட்டத்தில் சொத்துரிமைக்கு அளிக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமையை ஒரு சிலர்—தங்களுடைய வசதியான வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொண்டு இலட்சக் கணக்கான நாட்டு மக்களின் நல்வாழ்க்கைக்கு இடையூருக இருந்து வருகிருர்கள்; இந்த உரிமை அடிப்படையானதல்ல—அடிப்படையானதாக இருக்கவும் முடியாது." என்று சட்டத் துறைத் தலைவர் நிரேன் டே. இளம் வழக்கறிஞர்களிடையே உரையாற்றுகையில் எடுத்துக் காட்டினுர்.

'சொத்துரிமைக்கு அடிப்படை உரிமை உண்டா?' என்ற கேள்வியை அவர் கேட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"நாட்டில் இந்த அடிப்படை உரிமைமீது சிறிது காலமாகவே தகராறு இருந்து வருகிறது; இந்த உரிமையை அடிப்படையானது என்று கருதுவதற்கில்லை.

"அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய பகுதியில் பல உரிமைகள் சேர்க்கப்பட்டிருப்பதால், அவை, 'அடிப்படை உரிமை' என்று கூறப்படுவது உண்மையே; ஆனுல் நமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு அது இடையூறு பண்ணுவதாகஇருந்தால் 'அவற்றை மாற்றுவதற்கில்லை' என்று கூறிவிட முடியாது.

"உயிருக்கும், சொத்துரிமைக்கும் அடிப்படை உரிமை உண்டு என்று அறிவிக்கும் அதே பிரிவில், தடுப்புக் காவல் பற்றிய பிரிவு இடம் பெற்றிருப்பது எனக்குப் புரியவில்லை.

"மக்களின் பொதுநலனை முன்னிட்டு அதற்கு நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்க முடியுமானுல், சட்ட மன்றங்கள் நிர்ணயித்தபடி நட்ட ஈடு அளித்துவிட்டு—பொதுக் காரியங்களுக்கு அரசு, சொத்துக்களைக் கைவசப்படுத்த முடியும் என்ருல், சொத்து சம்பந்தமாக அடிப்படை உரிமை என்று கூறப்படுவது தவருன அடிப்படையில் எழுந்த எண்ணமாகும்."

●

3-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தப் புகழ் மேலும் பன்மடங்கு அதிகமாகித் திகழத்தக்கமுறையில் திருச்சி மாநாடு அமையவேண்டுமென்று விழைகின்ருேம்.

நாட்கள் அதிகமில்லை! நாடு நிரம்ப எதிர்பார்க்கிறது!! எனவே மாநாட்டு அமைப்பாளர்கள் மிகச் சுறுசுறுப்புடன் பணியாற்றித் தீரவேண்டும்.

திருச்சி மாநாட்டு வெற்றி, பிறமாவட்டங்களுக்குப் புத்தார்வம் ஊட்டத்தக்கதாக அமைதல் வேண்டும்.

அதற்கேற்ற ஆற்றல் படைத்தவர்கள் நிரம்ப உள்ள பெருவட்டம். பொன்னியின் செல்வர்கள் நடாத்திடும் மாநாடு பொலிவுள்ளதாகத்தானே அமையும்!

1969ல் பேரறிஞர் அண்ணு அவர்களது அழைப்பு இதுதான்! 1970ல் இந்த அழைப்பினை விடுக்க அவர் இல்லை. அவர் இல்லாத முதல் மாநாடும் இந்தத் திருச்சி மாநாடுதான்!

கழகத் தலைவர்களும், முன்னணியினரும் அமைச்சர்கள் என்ற அந்தஸ்த்தோடு பங்கு பெறுவதும் இந்த மாநாடுதான்!

சிறப்புக்குக் கேட்கவேண்டியதில்லை. சிறப்புச் செய்பவர்கள் தோழர்கள்! துவள மாட்டார்கள். ஏனென்ருல் ஒரு ஆட்சியையே அவர்கள் அமைத்துத் தந்திருக்கிருர்கள்!

பொன்னி நதிக்கரை நோக்கிப் புறப்பட எல்லா ஆயத்தங்களையும் இன்றே மேற்கொள்வோம்!

★

## உரைகல்:

தமிழரசன் கவிதைகள்
(முதல் தொகுதி)

விலை ரூ. 5-00

வெளியிட்டோர்: தமிழரசன் பதிப்பகம்.
இடைப்பாடி, சேலம் மாவட்டம்.

இந்நூலின் ஆசிரியர் தமிழரசன் அவர்கள் பல்லாண்டுக்காலமாகவே தமிழகத்துக்கு—குறிப்பாகக் கவிதையுலகுக்கு நன்கு அறிமுகமானவர். இவரது கவிதைகளின் சிறப்புபற்றி பல்வேறு இதழாசிரியர்களும் கொடுத்திருக்கும் நற்சான்றுகளே, நூலின் சிறப்புரைக்கப் போதியனவாகும். பாவேந்தரையும், ஜீவானந்தம் அவர்களையும் வளர்ப்புத் தந்தையர்களாகப் பாவிக்கும் இவரைப்பற்றி, பாவேந்தரே பாடியிருப்பதைப் படிக்கும் போது, அதை விட்டுவிட்டுக் கவிதைகளுக்குள் நுழையவேண்டுமென்ற ஆர்வந்தான் ஏற்படுகிறது. ஜீவா அவர்கள் "......தீயனவற்றையும், அநீதியையும், மிடிமையையும், எளியருக்குச் சூதர் செய்கின்ற கொடுமையையும் ஏமாற்றுத் தனத்தையுங் கண்டு அவற்றின்மேல் தீப்பிழம்பைக் கக்குகின்றன இவரின் கவிதைகள்" என்கிருர். அத்துடன், கவிஞரைப்பற்றி அவர் கூறியிருக்கின்ற கருத்துக்கள் யாவும் நூலுக்குள் நுழையத்தான் தூண்டுகின்றன. மொழி, சமுதாயம் போன்ற தலைப்புக்களில் பெய்யப் பெற்றிருக்கின்ற பாக்களுக்கு, ஜீவாவைவிட புதிதாக ஒன்றைச்சொல்லிவிட முடியாதுதான்! விலையைப்பற்றி மட்டும் சொல்லி விடவேண்டும். ஐந்து ரூபாய் என்பது அதிகமாகவே தோன்றுகிறது. ஆசிரியரின் "நம்பிக்கை"யில் கூறியிருப்பதுபோல் ஒரு பலப்பரீட்சைதான், விலையைப் பொறுத்தமட்டில்.

—சொ. அ. முத்துராமன்

காஞ்சி 15—2—70 REGD. NO. M. 8326

## வினா-விடை

**ஆர். ஏகாம்பரம், புவனகிரி**

அறிஞர் அண்ணா அவர்களது நினைவுத் தபால்தலையில் இந்தி எழுத்துக்கள் இருப்பதுபற்றிய வினாயகத்தின் குற்றச்சாட்டுக்குத் தங்கள் பதில் என்ன?

வினாயகத்தின் குற்றச்சாட்டில் ஆழம் இருப்பதாக ஒப்பமுடியவில்லை. உலகத்தமிழ் மாநாடு தொடர்பாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் இந்தி எழுத்துக்கள் இருந்தன; அதனால் அதனை வெளியிட முடியாது என்று பேரறிஞர் அவர்கள் மறுக்கவில்லை. அஞ்சல் துறை இந்திய அரசின் கட்டளைகளைச் செயல்படுத்துவதுதான் அஞ்சல்தலைகளில் இந்தி எழுத்துக்கள் இருப்பதென்பது. உலகத்தமிழ் மாநாடு தொடர்பான அஞ்சல் தலையில், அதன் வழக்கமான 'இந்தியா' என்ற சொல்மட்டுமல்ல. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொன்மொழியைக்கூட அந்தத் துறை இந்தியில் பொறித்துத் தந்திருந்தது. அதனைக் கண்டிக்குமுகமாகத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அதனை வெளியிட மறுத்தார்கள். இந்தி எதிர்ப்பு என்பது வேறு; இது வேறு. இரண்டையும் ஒன்றாயிணைத்துப் பார்ப்பது சரியா என்றேசிந்திக்கவேண்டும். அறிஞர் அண்ணா அவர்களின் நினைவுக்கு இந்தியப் பேரரசே, அஞ்சலி செலுத்த முன்வரும்போது அதனைப் பொருத்தமற்ற ஒரு காரணம்காட்டி, கலைஞர் மறுக்காமல் வெளியிட்டிருக்கிறார், அல்லாமல் அறிஞர் பெருந்தகையின் கையொப்பத்தினை, அப்படியே தமிழில் வடித்துத் தந்திருப்பதுகூட வரவேற்கவேண்டிய ஒன்றல்லவா! ரூபாய் நாணயங்களிலும் அஞ்சல் அட்டை, உறை தலை முதலானவைகளிலும் காணப்படும் இந்தியை ஒழிக்கவேண்டிய சூழல் வரும்போது —நிலைமையேற்படும்போது கழகம்தான் முன்னணியில் இருக்கும் என்பது வினாயகத்துக்குத் தெரியாவிட்டாலும் கருத்திருமனுக்குப் புரியாவிட்டாலும், தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியுமே!

**எம். கே. முகையதீன், புலிவலம்.**

விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறதென்று, போராட்டம் நடத்தப் போகிறதாமே காங்கிரஸ்? உண்மையா? எந்தக் காங்கிரஸ் அது?

காமராசர்காங்கிரசாரிடமிருந்து அண்மையில் அப்படித்தான் ஒரு செய்தி வந்திருந்தது. மத்திய அரசின் பட்ஜெட் காரணமாக விலைகள் உயரும்போது, அதைக் காரணம் காட்டி, இந்திராவை வீழ்த்தத்தான் அந்தப் போராட்டம் என்று தலைவர்கள் மட்டத்தில் பேசிக்கொள்ளப்பட்டதாம்!

**கே. குமாரசாமி, காஞ்சிபுரம்.**

பாங்குகள் நாட்டுடைமையாக்கப்பட்டது செல்லாது என்ற தீர்ப்புக் கேட்டு காமராசர் கூட்டம், கொண்டாட்டத்தில் மூழ்கி இருக்கிறதா?

"நவசக்தி" செய்தி தந்திருக்கும் முறையைப் பார்க்கும்போது அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. மொரார்ஜி தெரிவித்திருக்கும் கருத்துக்களும் அந்தப் பிரமிப்பைத்தான் உண்டாக்குகின்றன. பணத் திமிங்கிலங்களுக்குத்தான் அவர்கள் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள் என்பதை, அடையாளங் காட்டிக் கொடுத்துவிட்டது இந்நிகழ்ச்சி. ஏழை, ஏழை என்பதெல்லாம் ஏய்க்கப் பயன்படும் சொல் என்றும் புரிகிறது. எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் மக்கள்.

**எம். எஸ். இலட்சுமணன், மாரங்குடி.**

தமிழக அரசு, பரிசுச்சீட்டுத் திட்டத்தில் பொங்கல் பரிசாகக் கொடுத்த ரூ. 10 லட்சமும், மூன்றே மூன்று பேருக்குத்தானே போய்ச்சேர்ந்தது? விரும்பத்தக்க முறையா இது?

விரும்பத்தக்கமுறைஅல்ல என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பலனை பரவலாகப் பங்கிட்டுக் கொடுத்திருந்தால் இன்னும் பல்லாயிரம்பேர்பலன் பெற்றிருப்பர். பொருளாதாரப் பொலிவுக்கு அதுதான் உகந்ததாகவுமிருந்திருக்கும். பத்தாயிரங்களையும், ஆயிரங்களையும் நூறுகளையும் விரிவு படுத்தி இருக்கலாம். தொடர்புடைய துறையினருக்கு எழுதிப்பாருங்களேன்.

**தமிழ்மாறன், மேலப்பெரும்பள்ளம்.**

காமராசர் சேலத்தில் பேசிய பேச்சுக்களை, ராம் சுபாக்சிங் ஏற்பார் என்று எதிர்பார்க்கலாமா?

எங்கோ பிழையேற்பட்டிருக்கிறது என்பதை எதிர்பார்க்கலாம். தாரகேசுவரிக்கும் சரி, ராம்சுபாக்சிங்குக்கும் சரி, தமிழில் பயிற்சி கிடையாது. எனவே, காமராசரது பேச்சு எப்படிப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியாதே! மொழி பெயர்த்துக் கூறியவர்கள்கூட "அரசியல்" செய்திருக்கலாமில்லையா? எனவே, கொஞ்ச நாள் பொறுத்திருங்கள். செய்திகள் எப்படி மாறுகின்றன என்பதைக் கண்டறியலாம்.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
36, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.